செ.வெ.எண்.10 நாள்:09.11.2020.

நீலகிரி மாவட்டம் உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 90 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு ரூ.31.41 இலட்சம் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

---

நீலகிரி மாவட்டம் உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (09.11.2020) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கலந்து கொண்டு 90 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு ரூ.31.41 இலட்சம் மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

நீலகிரி மாவட்டத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 06.11.2020 அன்று வருகை தந்து பல்வேறு முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு துறைகள் சார்பில் அரசின் நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார். இந்த விழாவில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலி ஒரு பயனாளிக்கு வழங்கப்பட்டது. இன்று இதன் தொடர்ச்சியாக மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 28 பயனாளிகளுக்கு தலா ரூ.99,999/- மதிப்பிலான பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலிகளும், நலவாரிய திட்டத்தின் கீழ் இயற்கை மரணம் அடைந்த 7 நபர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.17,000/-த்திற்கான காசோலையினையும், அதே போல் 2 பயனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை மற்றும் 1 பயனாளிக்கு திருமண உதவித்தொகையும் வழங்கப்பட்டது.

மேலும் 50 பயனாளிகளுக்கு தலா ரூ.4,323/- மதிப்பிலான மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்களையும், பார்வையற்ற 2 பயனாளிக்கு தலா ரூ.750/- மதிப்பிலான பிரெய்லி கடிகாரம் என மொத்தம் 90 பயனாளிகளுக்கு ரூ.31.41 இலட்சம் மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் இன்று வழங்கப்பட்டது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.சாந்தி (எ) ராமு, மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் திரு.கப்பச்சி டி.வினோத், மாற்றுத்திறனாளி நல அலுவலர் திருமதி.மலர்விழி மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.